பக்கங்கள்: 06

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:02 | 02.11.2023 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# மைத்திரி உள்ளிட்டோரின் சொத்துகளைத் தேடும் நீதிமன்றம்



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்கல் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவிற்கு அமைய நட்ட ஈட்டை முழுமையாக வழங்கத் தவறியுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தமது சொத்துகள், பொறுப்புகளை சத்தியக்கடதாசிகள் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் இன்று (02) இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் குறித்த சத்தியக்கடதாசிகளை சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட 13 அடிப்படை உரிமை மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலையில் இந்திய நிதியமைச்சர்

திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 'ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியாவின் திருகோணமலைக் கிளையை' இன்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உட்பட பல அதிதிகள் பங்கேற்றிருந்தனர்.

வங்கியில் முதல் கணக்கைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தொடங்கியதுடன், அதற்காக ஆவணத்தை நிர்மலா சீதாராமன் செந்தில் தொண்டமானிடம் கையளித்தார்.



(பக்கம் 02)

# வரவு செலவுத் திட்டத்திற்கான முன்மொழிவுகளை வழங்க தனியார் துறைக்கும் வாய்ப்பு

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தனியார் துறையினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தனியார் துறை நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு முந்திய கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு, நிலையான வளர்ச்சியை நோக்கி நகர்த்துவதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்த வேலைத்திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி தனியார் துறை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக தனியார் துறையினரால் வழங்கப்படும் முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அங்கு அரசாங்கத்தின் வருமானம்.... (பக்கம் 02)

# 30 மில்லியன் மோசடி நாமல் ராஜபக்ஷ விடுதலை

கவர்ஸ் கோர்ப்பரேட் நிறுவன சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 5 பிரதிவாதிகளும் சாட்சி விசாரணையின்றி முழுமையாக விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முறைப்பாட்டு தரப்பு வழங்கிய சாட்சியங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ள முடியாதவை எனவும் அவற்றில் நம்பிக்கை இல்லை எனவும் அறிவித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இன்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்துடன், தற்போது நீதிமன்றத்தை தவிர்த்து வரும் வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான பிரபாத் கருணாஜீவவுக்கும் நான்காம் பிரதிவாதிக்கும் விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையை உடனடியாக நீக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அத்துடன் பிரபாத் கருணாஜீவவை கைது செய்யுமாறு விடுக்கப்பட்ட திறந்த பிடியாணையை மீளப்பெறுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்....



(பக்கம் 02)

# திருகோணமலையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனைத்தொடர்ந்து நிர்மலா சீதாராமன் மற்றும் அவரது குழுவினர் இந்திய எண்ணெய் நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கூட்டம் ஒன்றிலும் கலந்து கொண்டனர். இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று காலை திருக்கோணேஸ்வரம் கோயிலில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டார்.

## 30 மில்லியன் மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது முறைகேடாக ஈட்டிய 30 மில்லியன் ரூபா பணத்தை கவர்ஸ் கோர்ப்பரேட் நிறுவனத்தில் பயன்படுத்தியமை ஊடாக பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதாக கூறி நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## வரவு செலவுத் திட்டத்திற்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் வினைத்திறனை அதிகரிப்பது, முதலீட்டாளர்களை ஈர்ப்பது, சுற்றுலாத்துறை, ஆடைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை மேம்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் தனியார்துறை நிறுவனங்களின் தலைவர்கள் ஜனாதிபதியிடம் யோசனைகளை முன்வைத்தனர்.




# அதிபர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் வைபவம்

நாடளாவிய ரீதியில் இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் தரத்துக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் சனிக்கிழமை நடைபெற உள்ளது.

மேல் மாகாண நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் தேசியநிகழ்வாக இடம் பெறவுள்ளது. இதில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த மற்றும் மேல் மாகாண ஆளுநர் ஏயார் வைஸ் மார்ஷல் ரொசான் குணதிலக தலைமையில் இடம்பெறவுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட மாகாணக்கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் வடக்கு மாகாணங்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் 4ஆம் திகதி சனிக்கிழமையும் ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிகழ்வு 6ஆம் திகதி திங்கட்கிழமையும் மத்திய மாகாண நிகழ்வு 8ஆம் திகதி புதன் கிழமையும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுகள் அந்தந்த மாகாணங்களின் பிரதான நகரங்களில் ஆளுநர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

# இஸ்ரேலுடனான உறவை துண்டித்தது பொலிவியா


இஸ்ரேல் உறவை முழுமையாகத் துண்டிப்பதாக பொலிவியா நாடு தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் காஸா மீதான தாக்குதலுக்கு இஸ்ரேலுக்கு கண்டனமும் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக காஸா மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதல் நடத்தி வருகிறது என்பதும் இதனால் ஹமாஸ் தீவிரவாதிகள் ஒருபக்கம் அழிக்கப்பட்டு வந்தாலும், பொது மக்களும் பாதிப்படைந்து வருகின்றனர் இதுவரை மட்டும் 8000 பேர் உயிரிழந்ததாகக் கூறப்படும் நிலையில் அதில் 3000ற்கு மேற்பட்டோர் குழந்தைகள் என்பது அதிர்ச்சி தகவலாகவுள்ளது. இந்த நிலையில் இஸ்ரேல் போர் நடவடிக்கை காரணமாக அந்நாட்டுடனான உறவை துண்டித்துக் கொள்வதாக பொலிவியா அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

மேலும் காஸா ஆக்கிரமிப்பு மற்றும் இஸ்ரேல் இராணுவத்தின் செயல்பாடுகள் இந்த உறவை துண்டிக்க வைத்ததாக பொலிவியா அரசு தெரிவித்துள்ளது. காஸா மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் போர் நிறுத்தம் அறிவிக்கும்வரை இஸ்ரேலுடன் எந்த ஒட்டும் உறவும் இல்லை என்றும் பொலிவியா குறிப்பிட்டுள்ளது.

# 1200 ஊழியர்களை குடும்பத்துடன் சுற்றுலா அழைத்துச் சென்ற பிரபல தொழிலதிபர்

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பிரபல சிட்டாடல் என்ற நிறுவனம் தங்கள் நிறுவன ஊழியர்களை டோக்கியோ நகரில் உள்ள டிஸ்னிலேண்டுக்கு அழைத்துச் சென்றுள்ளது.



ஜப்பான் நாட்டைச் சேர்ந்த தொழிலதிபர் கென்னத் சி.கிரிபின். இவரது நிறுவனம் சிட்டாடெல்.

இந்த நிறுவனத்துடன் மேலும் பல தொழில்களையும் அவர் செய்து வருகிறார். இந்த நிலையில், தன் நிறுவனத்தின் 30 ஆவது ஆண்டு விழாவையொட்டி, தன் நிறுவன ஊழியர்களை மகிழ்விக்க எண்ணி, தன் நிறுவனத்தில் உள்ள 1200 ஊழியர்களை அவர்களின் குடும்பத்தினருடன் 3 நாள் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்தார். டோக்கியோ நகரிலுள்ள டிஸ்னிலேண்ட் பொழுது போக்கு பூங்காவுக்கு அழைத்துச் செல்வது, சாப்பாடு, தங்குமிடம் ஆகிய அனைத்துச் செலவையும் அவரே ஏற்றுக் கொண்டதாக தகவல் வெளியாகிறது.


# ஒரு பறவையின் விலை ரூ.12 லட்சம் பாகிஸ்தானில் சிறகடிக்கும் வியாபாரம்

கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு, பாகிஸ்தானில் அரிய ரக வண்ணப் பறவைகளை வளர்ப்பதற்கும் விற்பதற்கும் மக்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது.

இது வீட்டிலிருந்தே செய்யக்கூடிய தொழில் என்பதால் பலருக்கும் இது வருமானத்திற்கான வழியாக மாறியிருக்கிறது.

இந்தியப் பணமதிப்பில் 6,000 ரூபாய் தொடங்கி, மிகவும் அரிதான பறவைகள் 15 லட்ச ரூபாய் வரை விற்கப்படுகின்றன.

பாகிஸ்தானில் லவ் பேர்ட்ஸ் எனப்படும் ஆப்பிரிக்க கிளிகள் மட்டுமல்ல அவுஸ்திரேலிய கோல்டியன் பறவைகள், பஞ்சவர்ணக் கிளிகள் போன்ற பல அரிய வகைப் பறவைகளும் வளர்த்து விற்கப்படுகின்றன.



கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு, பாகிஸ்தானில் இது ஒரு முழுநேரத் தொழிலாக மாறி வருகிறது. உள்ளூரின் இருப்பவர்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருப்பவர்களும் இவற்றை வாங்க ஆர்வம் காட்டுகின்றனர்.

பறவைகளை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய, பாகிஸ்தானின் பறவை விற்பனையாளர்கள் இந்தத் தொழிலை குறுந்தொழிலாக அறிவிக்க அந்நாட்டின் வர்த்தக சபையிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

# ராஃபா எல்லையை திறந்தது எகிப்து: வெளிநாட்டவர்களுக்கு மட்டும் அனுமதி

ராஃபா எல்லையை எகிப்து நேற்று திறந்தது. காஸாவிலிருந்து ராஃபா வழியே எகிப்துக்குள் வருவதற்கு வெளிநாட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், போரில் தீவிர காயமடைந்த 81 பாலஸ்தீனர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக காஸா எல்லை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எகிப்துக்கும் பாலஸ்தீனத்தின் காஸாவுக்கும் எல்லைப் பகுதியாக ராஃபா அமைந்துள்ளது.

போரிலிருந்து தப்பிப்பதற்காக மக்கள் காசாவிலிருந்து வெளியேறி எகிப்துக்குள் நுழைய திட்டமிட்ட நிலையில், எகிப்து அரசு ராஃபா எல்லையை மூடியது. அதன் பிறகு, ராஃபா எல்லை வழியாக காசாவுக்குள் அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மட்டும் எகிப்து அனுமதி வழங்கியது. காஸாவிலிருந்து மக்கள் எகிப்துக்குள் நுழைய அனுமதி மறுத்தது.

அமெரிக்கா மற்றும் கட்டார் ஆகிய இரு நாடுகள் பேச்சுவார்த்தை மேற்கொண்டதையடுத்து, மக்கள் வெளியேறுவதற்காக தற்காலிகமாக ராஃபா எல்லையை எகிப்து திறந்துள்ளது.

காஸாவில் உள்ள வெளிநாட்டவர்களுக்கும் இரட்டை குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே ராஃபா எல்லை வழியாக எகிப்துக்குள் வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், போரில் காயமடைந்த 81 பாலஸ்தீனர்களை சிகிச்சைக்காக எகிப்துக்குள் அழைத்து வருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. போரால் காயமுற்றவர்கள் மற்றும் உடல்நலம் குன்றியவர்களை அழைத்துச் செல்ல எகிப்து எல்லையில் அம்புலன்ஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

# விசாரணைக்கு ஆஜராகாத கெஜ்ரிவால்

அமலாக்கத்துறை விசாரணைக்கு இன்று ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டு இருந்த நிலையில், டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால் அங்கு செல்லாமல் மத்திய பிரதேசத்துக்கு சென்று இருக்கிறார்.

அமலாக்கத்துறை கடந்த 2 நாட்களுக்கு முன் சம்மன் அனுப்பி இருக்கிறது.

இது அரசியல் வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. ஆம் ஆத்மி கட்சித் தலைவர்களை பொய் வழக்கில் சிக்க வைப்பதற்கு அமலாக்கத்துறை முயற்சிப்பதாகவும் அக்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

கெஜ்ரிவாலை விசாரணைக்கு கைது செய்ய திட்டமிட்டு உள்ளதாக டெல்லி அமைச்சர் அதிஷி பகீர் குற்றம் சாட்டியுள்ளார்.

# 20 லட்சம் ஆப்கானியர்களை நாடு கடத்துகிறது பாகிஸ்தான்

பாகிஸ்தானில் இருந்து வெளியேறுவதற்கான காலக்கெடு முடிந்துள்ளதால், பத்து லட்சத்திற்கும் அதிகமான ஆப்கானிஸ்தான் அகதிகளை பாகிஸ்தான் நாடு கடத்த உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா) போன்ற சர்வதேச அமைப்புகள், ஆவணமற்ற அகதிகளை வெளியேற்ற வேண்டாம் என்று பாகிஸ்தானிடம் கோரிக்கை விடுத்த பின்பும் இந்தச் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுடனான தனது எல்லையில் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் அவர்களை நவம்பர் 1 ஆம் திகதிக்குள் வெளியேறுமாறு பாகிஸ்தான் உத்தரவிட்டது.

ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரை 60,000 ஆப்கானியர்கள் வெளியேறியுள்ளனர். அவர்களில் 78% பேர் தாங்கள் பாகிஸ்தானிலேயே தங்கியிருந்தால் கைது செய்யப்படுவோம் என அஞ்சியதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

“நாடு கடத்தப்படுவதை எதிர்கொள்பவர்களில் பலர் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பினால் மனிதவுரிமை மீறல்களுக்கு ஆளாக நேரிடும் என்று நாங்கள் நம்புகிறோம், இதில் தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவல், சித்திரவதை, கொடூரமான மற்றும் பிற மனிதாபிமான மற்ற நடத்தை ஆகியவை அடங்கும்” என ஐ.நா



மனித உரிமைகள் அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் ரவினா ஷம்தாசனி கூறினார்.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# இந்தியாவை சாந்தப்படுத்தும் இலங்கை

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சீனக்கப்பல் விவகாரம் பூசி மெழுகப்பட்டதன் பின்னர் இந்திய நிதி அமைச்சருக்கு இலங்கை அமோக வரவேற்புக் கொடுத்துள்ளது. கொழும்பில் நடைபெற்ற 'நாம் 200' நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்திக்கவுள்ளார்.**

**இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஈடுபாடுகளுக்கு கூடுதல் வேகத்தை அளிக்கும் வகையில் பல நகரங்களுக்கு பயணம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**அமைச்சருடன் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியாவின் தொழில்துறை தலைவர்கள் பரஸ்பர நன்மைகளை அடைவதற்காக இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை சாதகமாக்குவார்கள். இலங்கையைப் பொறுத்தவரை, இத்தகைய முதலீடுகள் அதன் பொருளாதார மீட்சிக்கு முக்கியமாகும்.**

**இலங்கையின் பொருளாதார மீட்சி செயல்முறைக்கு தாங்கள் அர்ப்பணிப்புடன் இருப்பதாக இந்தியா பல சந்தர்ப்பங்களில் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

**இந்த முயற்சியில் முதலீடுகளின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டி, இந்தியா-இலங்கை இருதரப்பு உறவுகள் தொடர்பாக பரஸ்பர நன்மை பயக்கும் முதலீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று இந்தியா அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.**

**இந்தியா தற்போது இலங்கைக்கான முதலீட்டின் மிகப்பெரிய ஆதாரமாகவும் சுற்றுலாப் பயணிகளின் மிகப்பெரிய ஆதாரமாகவும் உள்ளது.**

**இந்திய தொழில்துறை பிரதிநிதிகளுக்கு நிதியமைச்சரின் உத்தரவு, நீடித்த மற்றும் உற்பத்தி செய்யும் வணிக மற்றும் வணிக உறவுகளை உருவாக்குவதாகும், இந்திய நிதி அமைச்சரின் இலங்கை விஜயம் முற்றுமுழுதாக பொருளாதார நோக்கம் கொண்டதாகும்.**

**இந்தியா இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாகவும் உள்ளதுடன், பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் அளவை விரிவுபடுத்தும் நோக்குடன் இரு தரப்பும் தற்போது VTCM - பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் 12 ஆவது சுற்றில் ஈடுபட்டுள்ளன.**

**இலங்கை முழுவதிலும் உள்ள சமய தலங்களுக்கு சூரிய ஒளி மின்சாரம் வழங்குவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரிமாறிக் கொள்வதாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அஸ்கிரிய பீடாதிபதி வணக்கத்துக்குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரருக்கு அறிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான புத்த மத உறவுகளை மேம்படுத்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த 15 மில்லியன் அமெரிக்க டொலர் மானிய உதவியின் கீழ் இது முதல் திட்டம். நிதியமைச்சர் 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பலதரப்பட்ட உதவிகளை விரைவாகக் கண்காணிப்பதில் முக்கியப் பங்காற்றினார்.**

**பொருளாதார மற்றும் நிதிச் சிக்கல்களின் போது இலங்கைக்கு சிறப்புப் பொதிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் வலுவாக வாதிட்டார். அதைத் தொடர்ந்து, IMF தொகுப்புக்கு வழி வகுத்த எழுத்துப்பூர்வ உத்தரவாதத்தை வழங்கிய முதல் இருதரப்பு கடன் வழங்குனராக இந்தியா இருந்தது.**

## வடக்கில் 370 அதிபர் மற்றும் பிரதி அதிபர்களை நியமிக்க நடவடிக்கை – மாகாண பணிப்பாளர்

வடமாகாணத்தில் பதின்மூன்று வலயங்களிலுள்ள பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் மற்றும் பிரதி அதிபர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக வட மாகாண கல்வி பணிப்பாளர் யோன் குயின்-ரஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதியில் அதிபர் மற்றும் பிரதி அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வுக்காக சுமார் 4500 பேர் பங்குபற்றியுள்ளனர். இந்த நிலையில், வடக்கில் சுமார் 370 பேர் வெற்றிடமாக உள்ள பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ளார்கள் என தெரிவித்துள்ளார்.

## தெஹிவளை மிருகக்காட்சி சாலையினுள் கேபிபராக்கள்



செக் குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஒரு ஜோடி ஆண் மற்றும் பெண் கேபிபராக்கள் விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டு தெஹிவளை விலங்கியல் பூங்காவில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கேபிபராஸ் தெற்காசிய நாடுகளில் வாழும் அரிய வகை விலங்கினங்களைச் சேர்ந்தது என்றும் ஆனால் இலங்கையைச் சேர்ந்தது அல்ல என்றும், நன்கு வளர்ந்த விலங்கு சுமார் நான்கு அடி உயரம் கொண்டது என்றும் மிருகக்காட்சிசாலையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கேபிபராஸ் தாவரவகை விலங்குகள் என்று அவர் கூறினார், அதன் ஆயுட்காலம் சுமார் ஆறு ஆண்டுகள் ஆகும்.

மிருகக்காட்சிசாலையில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு விலங்குகளின் தனிமைப்படுத்தப்பட்ட காலம் முடிந்துவிட்டதாகவும், அவை பொது காட்சிக்கு தயாராக இருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

## போதைப்பொருள் கடத்தல்காரரான பொப் மார்லி கைது

காலி - ஓபாத - வீரப்பன பிரதேசத்தில் பாரியளவான போதைப்பொருள் கடத்தல்காரரான பொப் மார்லி என்றழைக்கப்படும் சமிந்த தப்ரு உள்ளிட்ட நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒபத்த பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி பேருவளை கடற்கரையில் 300 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 288 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபரும் இந்த பொப் மாலி ஆவார்.

43 வயதான சந்தேக நபர் பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் மாலபே தலஹேன பிரதேசத்தில் தற்காலிகமாக வசிப்பவர் எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பொப் மாலி உள்ளிட்ட சந்தேகநபர்கள் நால்வரும் இன்று உடுகம நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

## அரசியல் கட்சியிடமிருந்து வீட்டை மீட்டுத் தாருங்கள் யாழில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தனது வீட்டை அரசியல் கட்சியிடம் இருந்து மீட்டுத் தருமாறு, நபரொருவர் முறைப்பாடு செய்துள்ளார். அவர் அளித்துள்ள முறைப்பாட்டில்

“தனது வீட்டில் அரசியல் கட்சி ஒன்றின் மக்கள் தொடர்பு அலுவலகமொன்று இயங்கி வருகின்றது. அதனை திருப்பி தருமாறு முறையிட்டார்.

## டிப்பர் மோதி மரம் சேதம்

வவுனியா நகரில் மணிக்கூட்டு கோபுரம் பகுதியில் உள்ள மரம் மீது வியாழக்கிழமை அதிகாலை டிப்பர் மோதி இரண்டு மரங்களும் விளம்பரப்பதாகைகளும் சேதமடைந்தன. சாரதியைக் கைது செய்த பொலிஸார் டிப்பரைத் தடுத்து வைத்துள்ளனர்.

வவுனியா மணிக்கூட்டுக்கோபுரம் பகுதியை அழகுபடுத்தும் திட்டத்தை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வவுனியா வர்த்தக சங்கம் மேற்கொண்டு நகரில் விலையுயர்ந்த அழகுபடுத்தும் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் வியாழக்கிழமை அதிகாலை மணிக்கூட்டுக் கோபுரம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக யாழ். வீதியிலிருந்து கண்டி வீதி நோக்கிப் பயணித்த டிப்பர் வீதியில் அமைக்கப்பட்ட விளம்பர பதாகைகளை மோதிக் கொண்டு இரண்டு அழகுபடுத்தும் மரங்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தியது.

## பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்தில் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபி துப்பரவு செய்யப்பட்டு ஈகை சுடர் ஏற்றப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபியை துப்பரவு செய்யும் பணிகளில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம் ஈடுபட்டனர்.

அதன்பின் தூபியில் ஈகைச்சுடர் ஏற்றி மாணவர்கள் மரியாதை செலுத்தினர்.

# காஸாவில் உள்ள இலங்கையர் வெளியேற விசேட அனுமதி

காஸா பகுதியில் சிக்கியிருந்த 17 இலங்கையர்களும் ரஃபா நுழைவாயிலூடாக எகிப்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளதாக இன்று (02) காலை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா, தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இந்தக் குழுவைச்சேர்ந்த சுமார் 15 பேர் எகிப்தையடைய உள்ளனர். அவர்களுக்குத் தேவையான உதவிகளை எகிப்து தூதரகமும் பாலஸ்தீனத்திலுள்ள பிரதிநிதி அலுவலகமும் செய்து வருகின்றன. அவர்கள் பத்திரமாக எகிப்தை அடையப் போகிறார்கள். அதைத் தவிர இலங்கையர்கள் தொடர்பில் இஸ்ரேலில் தற்போதைக்கு சிறப்புச் சூழலில்லை. இதேவேளை, காணாமல் போன இலங்



கையர் ஹமாஸ் அமைப்பினரால் பிடிக்கப்பட்டுள்ளதாக தூதுவர் தெரிவித்ததாகவும் அவரை மீட்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.



## 150 புகையிரத சாரதிகள் பற்றாக்குறை

புகையிரத திணைக்களத்தில் தற்போது 150 புகையிரத சாரதிகள் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் ரயில் போக்குவரத்தில் கடும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாரதிகள் பற்றாக்குறையால் சில சாரதிகள் விடுமுறை எடுக்காமல் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் சில சமயங்களில் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, இயக்க பணிக்கு உத்தரவிடப்பட்டாலும் ரயில் சாரதிகள் பற்றாக்குறை திணைக்களத்திற்கு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

புதிய ரயில் சாரதிகளை இணைத்துக்கொண்டாலும் அவர்களை சரியான சாரதியாக மாற்றுவதற்கு சுமார் 4 வருடங்கள் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாதிக்கப்பட்ட 65,000 விவசாயிகளுக்கு இழப்பீடு

மழை வெள்ளத்தால் கால பயிர்கள் சேதமடைந்த 65, 000 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஒரு ஹெக்டேருக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

வறட்சி, வெள்ளத்தால் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு அடுத்த மாத இறுதியில் இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வீரகட்டிய விவசாய சேவை நிலையத்தினால் வீரகட்டிய - அத்துபொதே பிரதேசத்தில் பரசூட் நெற்செய்கை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் 485 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் இந்த ஆண்டு 4,100 எச்.ஐ.வி நோய்த்தொற்று இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் செப்ரெம்பர் இறுதி வரை, 485 புதிய எச்.ஐ.வி நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ஒரு அதிகரிப்பாக நாங்கள் பார்க்கிறோம். அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுடனான ஒத்துழைப்புடன் எச்.ஐ.வி பரிசோதனைகள் அதிகளவில் நடத்தப்பட்டன.

இவர்களில் 80% ஆண்களே பதிவாகியுள்ளனர். எச்.ஐ.வி தொற்று 15-9 வயதிற்கு இடையிலானவர்கள் மத்தியிலேயே அதிகளவில் காணப்படுகிறது" என்றார்.

டிசம்பர் 01 ஆம் திகதி உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் பொதுமக்களை அறிவூட்டும் விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் ஜானகி விதானபத்திரன குறிப்பிட்டார்.

## இளநீர் ஏற்றுமதி 117 வீதத்தால் அதிகரிப்பு

இலங்கை இளநீருக்கு வெளிநாட்டு சந்தையில் கேள்வி அதிகரித்துள்ளதாகவும் இவ்வருடம் இளநீர் ஏற்றுமதி 117 வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தரவுகள் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு 11 மில்லியன் இளநீர் ஏற்றுமதி செய்யப்பட்டு 110 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



இவ்வருடம் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள இளநீரின் தொகை 14 மில்லியன் எனவும் இதன் மூலம் கிடைத்த வருமானம் 140 மில்லியன் ரூபா எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

## மூன்று பொருட்களின் விலையை குறைத்தது லங்கா சதொச




இன்று முதல் அமுலாகும் வகையில் மூன்று உணவுப் பொருட்களின் விலையை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

ஒரு கிலோகிராம் கடலையின் விலை 9 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 540 ரூபாவாகும்.

பாசிப்பயறு ஒரு கிலோகிராமின் விலை 77 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 998 ரூபாவாகும். அத்துடன், 400 கிலோகிராம் பால்மாவின் விலை 22 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 948 ரூபாவாகும் என சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.




## பொதுமக்களுக்கு பொலிஸாரின் வேண்டுகோள்

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் பாதாள உலக குழு உறுப்பினர்களால் கோரப்படும் கப்ப பணத்தை வழங்க வேண்டாம் என வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களிடம் காவல்துறை கோரியுள்ளது.

வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு காவல்துறை விடுத்துள்ள விஷேட அறிவிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கப்பம் கோரி வர்த்தகர்கள் உள்ளிட்ட சிலரை அச்சுறுத்திய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் காவல்துறைக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நிலையிலேயே, இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறையுடாகப்பேச்சாளர் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதேநேரம், வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள பாதாள உலக குழு உறுப்பினர்களின் பெயர்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிலர் கப்பம் கோரும் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வீரர்கள் காயம்

# அவுஸ்திரேலியாவுக்கு பின்னடைவு





இந்தியாவில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலியா ஆரம்பத்திலேயே அடுத்தடுத்த தோல்விகளைச் சந்தித்து புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்திற்கு சரிந்தது, ரசிகர்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாக அமைந்தது. ஆனாலும் அதற்கடுத்து தொடர்ச்சியாக 4 வெற்றிகள் பெற்ற அந்த அணி தற்போது புள்ளிப் பட்டியலில் 4 ஆவது இடத்திற்குள் நுழைந்து தங்களை வலுவான சாம்பியன் அணி என்பதை நிரூபித்து வருகிறது.

காயத்திலிருந்து குணமடைந்து இணைந்த டிராவிஸ் ஹெட் சதமடித்ததால் நியூஸ்லாந்துக்கு எதிராக 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற அவுஸ்திரேலியா மீண்டும் முழுப்பலத்தை பெற்றது, அந்நாட்டு ரசிகர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில் இந்த உலகக் கோப்பையிலிருந்து நட்சத்திர வீரர் மிட்சேல் மார்ஷ் திடீரென விலகி நாடு திரும்பியுள்ளதாக அவுஸ்திரேலியா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. குறிப்பாக, சொந்தக் காரணங்களுக்காக இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ள அவர் எப்போது அணியுடன் மீண்டும் இணைவார் என்று தங்களுக்கே தெரியாது எனவும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது. அதாவது, காலவரையின்றி வெளியேறியுள்ள மிட்சேல் மார்ஷ் இந்த உலகக் கோப்பையில் நாக் அவுட் சுற்றில்கூட விளையாடுவது சந்தேகமாகியுள்ளது அவுஸ்திரேலிய அணிக்கு மிகப் பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

காயத்திலிருந்து குணமடைந்து வந்த கிளென் மேக்ஸ்வெலும் பயிற்சி எடுக்கும்போது மீண்டும் காயமடைந்ததால் நவம்பர் 4 ஆம் திகதி கொல்கத்தாவில் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறும் முக்கிய போட்டியில் விளையாடமாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாக் அவுட் சுற்று நெருங்கும் நேரத்தில் 2 முக்கியமான வீரர்கள் விளையாடமாட்டார்கள் என்று தெரியவருவது அவுஸ்திரேலிய அணிக்கு கவலையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றே சொல்லலாம். இந்தச் சூழ்நிலையில் மார்க்கஸ் ஸ்டோனிஸ், கேமரூன் கிரீன் போன்ற ஆல் ரவுண்டர்கள் அந்த 2 வீரர்களுக்குப் பதிலாக இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த போட்டியில் விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பாலஸ்தீனியர்களுக்கு பரிசுத் தொகையின் ஒரு பகுதியை வழங்கிய வீராங்கனை

டென்னிஸ் வீராங்கனையான ஆன்ஸ் ஜபீர், கான்கனில் நடந்த போட்டியில் முதல் வெற்றிக்குப் பிறகு பாலஸ்தீனியர்களுக்கு உதவ பரிசுத் தொகையில் ஒரு பகுதியை வழங்க உறுதியளித்துள்ளார்.

குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் ஒவ்வொரு நாளும் இறப்பதைப் பார்ப்பது மிகவும் கடினம். நெஞ்சை பதற வைக்கிறது.

எனது பரிசுத் தொகையில் ஒரு பகுதியை பாலஸ்தீனியர்களுக்கு உதவியாக வழங்க முடிவு செய்துள்ளேன். இந்த வெற்றியால் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.

“இது ஒரு அரசியல் செய்தி அல்ல, இது மனிதநேயம்” என்று அவர் மேலும் கூறினார். “எனக்கு இந்த உலகில் அமைதி வேண்டும் அவ்வளவுதான்.”



29 வயதான அவர், 2022 இல் குழு நிலை நீக்கத்திற்குப் பிறகு, தனது வாழ்க்கையில் முதல் முறையாக WTM இறுதிப் போட்டியின் முதல் நான்கு இடங்களை அடைய முயற்சிக்கையில், கடைசி குழு நிலை ஆட்டத்தில் குழுத்தலைவர் இகா ஸ்விடெக்கை எதிர்கொள்கிறார்.

# டேபிள் டென்னிஸ் இரட்டையர் பிரிவில் அமெரிக்காவும் கியூபாவும் வென்றன

பெண்களுக்கான டேபிள் டென்னிஸ் இரட்டையர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் எமி வாங் மற்றும் ரேச்சல் சுங் ஜோடி பிரேஷில் ஜோடியான ஜியுலியா மற்றும் புருனா தகாஹாஷியை 4-3 என்ற கணக்கில் தோற்கடித்தது, அதே நேரத்தில் ஜார்ஜ் காம்போஸ் மற்றும் ஆண்டிடீஸ் அமைத்த கியூபா ஜோடி பிரேசிலின் ஹ்யூகோகால்டெரானோ மற்றும் விட்டோர் இஷி 4 ஆகியோரை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை வென்றது.




அமெரிக்கர்கள், ஆமி வாங் மற்றும் ரேச்சல் சுங், பிரேஷிலிய சகோதரிகளான புருனா மற்றும் கியுலியா தகாஹாஷியை முறியடித்தனர்.

சாண்டியாகோவில் உள்ள ஒலிம்பிக் பயிற்சி மையத்தின் டேபிள் 1-ல் 7 செட்களுக்கு சென்ற இந்தப் போட்டியில், அவர்கள் 11-7, 5-11, 7-11, 12-10, 11-8, 4-11 மற்றும் 11 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றனர்.

தென் அமெரிக்கர்கள் ஆக்ரோஷமாக விளையாடினாலும் அவர்களின் சர்வ்களில் பல தவறுகள்.

சிலி மற்றும் போர்ட்டோரிக்கோ அணிகள் வெண்கலப் பதக்கத்தை வென்றன.

ஆண்கள் பிரிவில், ஜார்ஜ் காம் போஸ் மற்றும் ஆண்டி பெரேரா ஆகியோரால் உருவாக்கப்பட்ட கியூபா ஜோடி, அமெரிக்காவின் சிறந்த வீரராகக் கருதப்படும் பிரேஷிலியர்களான விட்டோர் இஷி மற்றும் ஹ்யூகோ கால்டெரானோவை தோற்கடித்தது மற்றும் லிமா 2019 இல் நடந்த கடைசி கண்ட நிகழ்வில் சாம்பியன்ஷிப்பை வென்ற பிரேஷிலிய ஜோடியின் உறுப்பினராக கருதப்பட்டது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 02.11.2023 அன்று வெளியிடப்பட்டது.